இப்பொழுது பல்வேறுயிடங்களில் உபயோகப்படுத்தி வருகிறோம். பொதுமக்கள் அதனை விரும்பியேற்றுக் கொள்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. பழனிவேலு: தலைவரவர்களே, சிமெண்டுக்குப் பதிலாக சுண்ணாம்பு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் சுண்ணாம்பை நன்றாக அறைத்தால்தான் செங்கல்லில் பிடிப்பு ஏற்படும். அம்மாதிரியான குறைகள் இல்லாமல் எல்லா இடங்களில் நடக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சுண்ணாம்பு அறைக்க இப்பொழுது சமீபத்தில் மின்சார இயந்திரங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அந்த மின்சார இயந்திரங்களை வாங்கி ஆங்காங்கே மின்சாரத்தின் மூலம் அந்த இயந்திரங்களை ஓட்டி அவ்வப்பொழுது அறைத்து அவ்வப்பொழுதே கட்டுகிறார்கள். கட்டிடங்கள் மிகவும் திருப்தியாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நன்கொடை

*233 வினா.—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக ஆதரன் நிறுவனம் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்காக ஏதேனும் நன்கொடைப் பொருள்களை அண்மையில் வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகளில் மருத்துவ சுகாதார சேவைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக உலக ஆதரன் நிறுவனம் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு அண்மையில் ரூபாய் 3,04,721.81-யை நன்கொடையாக வழங்கியுள்ளது. இத்தொகையிலிருந்து ரூபாய் 2,15,143.80 செலவில் 5 நடமாடும் மருந்தக ஊர்திகள் (Mobile dispensary vans) வாங்கப்பட்டு, மருத்துவ வசதி அளிப்பதற்குத் தேவையான சாதனங்களும் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில் நான்கு ஊர்திகள் சென்னை மாநகராட்சி

யிடமும், எஞ்சிய ஒன்று புதுக்குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை என்ற சமூக சேவை நிறுவனத்திடமும் குடிசைமாற்று வாரியத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா: தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு உலக ஊதான் நிறுவனம் வழங்கிய உதவியைப்போல் வேறு எந்த நிறுவனமாவது வழங்கியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அப்படி வேறு எந்த நிறுவனமும் உதவி செய்யவில்லை.

திரு. எஸ். வடிவேல்: குடிசைமாற்று வாரியத்தின் பணி சிறப்பாக நடைபெற மடாலயங்களில் இருந்து நிதி உதவி கோரப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால் இப்போதாவது கோர அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இதுவரை மடாலயங்களில் இருந்து உதவி கோரப்படவில்லை. உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பற்றி யோசிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம்: குடிசை மாற்று வாரிய சுகாதாரப் பணிகளுக்காக சர்வீஸ் இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் என்ற நிறுவனம் பண உதவி செய்வதாகச் சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: உலகத்தின் பல்வேறு நிறுவனங்கள் பல்வேறுபட்ட காரியங்களுக்கு உதவி செய்து வருகிறது. உதாரணமாக, பெல்ஜியம் நாட்டில் இருப்பவர்கள் இந்த நாட்டில் இருக்கும் குஷ்டரோகத்தைப் போக்க மருத்துவ மனைகளை உருவாக்கி வருகிறார்கள். நம்மைப் பொறுத்தவரை ஊதான் நிறுவனம் உதவி அளித்திருக்கிறது.

திருச்சிற்றம்பலம் கோயில்

*234 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 ஆம் ஆண்டு, எப்ரல் மாதத்தில், திருச்சிற்றம்பலம் கோயிலில் உள்ள அம்மன் சிலை களவு போனது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?